தமிழர் நினைவேந்தல் அகவம் - சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil
www.maveerarnaal.ch trfswiss@gmail.com

**6 வயதுப்பிரிவு**
(01.01.2011 – 31.12.2011 வரையில் பிறந்தோர்)

# தமிழ் எங்கள் உயிர்

வையகத்தின் மூத்த மொழிகளுள் ஒன்று தமிழ்மொழி. அதுவே எங்கள் தாய்மொழி. 'தமிழர்' என்று தலைநிமிர்ந்து சொல்லும் தகைமை தந்த செம்மொழி. எங்கள் தாய்ப்பாலில் கலந்து, உயிரிலும் உணர்விலும் ஒன்றித்த மொழி. அன்பையும் பண்பையும் எம்மிடத்தில் வளர்க்கும் இனியமொழி. எமக்கு அறத்தையும் வீரத்தையும் போதிக்கும் அன்னைமொழி.

காலத்தால் அழியாது நிலைத்து நிற்கும் சிறப்புப் பெற்றது எம் தமிழ். ஒவ்வொரு தமிழரும் தங்கள் உயிருக்கு நிகராகத் தமிழைப் போற்ற வேண்டும். அதனை விருப்புடன் கற்க வேண்டும். தமிழர்களோடு தமிழில் பேச வேண்டும். இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழையும் முனைப்புடன் வளர்க்க வேண்டும்.

எம் தாய்மொழி தமிழையும், தாய்நாடாகிய தமிழீழத்தையும் உயிருக்கும் மேலாக நேசித்தவர் எங்கள் தலைவர் மாமா. அதற்காகவே வாழ்ந்து உயிர் தந்தவர்கள் எங்கள் மாவீரர்கள். அவர்கள் காட்டிய வழியில் நாமும் நடப்போம். தமிழ் எங்கள் உயிர் என்போம். தமிழ் வாழத் தமிழராய் வாழ்வோம்.

நன்றி,

வணக்கம்.